முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2018 சனவரி

# (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

2018-01-20
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  - (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  - (4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  - (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.*
  - (6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினா வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொல் நிரலிற் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியான **வரையறுக்கப்பட்ட ரேஸ்ரீ கம்பனியானது** பிஸ்கட்டுகளை உற்பத்திசெய்து இலங்கை பூராகவும் விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இந்த **வரையறுக்கப்பட்ட ரேஸ்ரீ கம்பனியின்** தொழிற்பாடுகளில் புறச் சூழல் தாக்கம் செலுத்துகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**வரையறுக்கப்பட்ட ரேஸ்ரீ கம்பனியின்** வியாபாரத்தில் தாக்கம் செலுத்துகின்ற புறச் சூழலின் மூன்று (03) கூறுகளை ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணத்துடன் **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட பிறீஸ் (தனியார்) கம்பனியானது** 15 ஆண்டுகளுக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்ட பரிப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இது நன்கு வளர்ச்சியடைந்து இலாபகரமான கம்பனியாக இயங்கி வருகிறது. இதன் பணிப்பாளர்கள் கம்பனியை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தத் திட்டமிடுகின்றனர். கூட்டிணைவு ஆளுமை (corporate governance) தொடர்புபட்ட சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைய நிரற்படுத்தப்பட்ட கம்பனியொன்றினால் ஊதியக் குழு (remuneration committee) ஒன்றும் கணக்காய்வுக் குழு ஒன்றும் நியமனம் செய்யப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கணக்காய்வுக் குழுவின் மூன்று (03) தொழிற்பாடுகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) ஊதியக் குழுவின் தொழிற்பாடு ஒன்றினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

"தரக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் (quantity control procedures) நிறுவன மட்டத்திலும் தனித்தனிக் கணக்காய்வு மட்டத்திலும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்".

**நீங்கள் செய்யவேண்டியது:**

தரக் கட்டுப்பாட்டு முறைமையொன்றின் ஐந்து (05) மூலகங்களைக் (elements) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 04

"நியாயமான உறுதிப்பாடு (reasonable assurance) என்பது கணிசமானளவு உயர்ந்த உறுதிப்பாட்டு மட்டமாகும். நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடலொன்றில் சேவை வழங்குநரின் நேர் வடிவிலான (positive form) வெளிப்பாட்டினைத் தெரிவிப்பதற்கு அடிப்படையாக, நியாயமான உறுதிப்பாட்டினைப் பெறுவதற்காக, ஈடுபடுத்தலின் புறநிலைகளுக்கு அமைய சேவை வழங்குநர் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய குறைந்த மட்டத்திற்கு உறுதிப்பாட்டு ஈடுபடல் இடரினைக் குறைத்துக்கொள்வார்."

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலுக்கு உதாரணம் ஒன்றினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றில் சேவை வழங்குநர் மறையான (negative) அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துவதற்கான காரணத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.
(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

(A) கணக்காய்வாளர் போதுமான, பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு ஏதுவாக, புறநிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைத்து மேற்கொள்வார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கணக்காய்வுச் சான்றுகளின் போதுமான மற்றும் பொருத்தமான தன்மை என்பதன் கருத்தினைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) **"**வெளிவாரி உறுதிப்படுத்தல்கள் (external confirmation)" எனும் பதத்தின் கருத்தினை ஒரு (01) உதாரணத்துடன் **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(B) **ரத்னா PLC** ஆனது அதன் ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறும்போது அவர்களுக்குச் செலுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட பயன் திட்டமொன்றினை (defined benefit plan) நடைமுறைப் படுத்துகிறது. ஒவ்வொரு அறிக்கையிடல் கால முடிவிலும் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டுடன் தொடர்புடைய பரிப்பினை மதிப்பிடுவதற்கான கணிப்பீட்டைச் செய்வதற்கு **ரத்னா PLC** ஆனது தகைமைபெற்ற ஆயுட்கால முறைக் கணிப்பீட்டாளர் (actuary) ஒருவரைப் பயன்படுத்துகின்றது. இந்த ஆயுட்கால முறைக் கணிப்பீட்டாளர் ஒவ்வொரு கால முடிவிலும் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டினைக் கணிப்பீடு செய்வதற்காகச் சில பிரதான எடுகோள்களைப் (உதாரணம்: கழிவு வீதம், சம்பள ஏற்ற வீதம், ஊழியர் புரள்வு வீதம் போன்றவை) பயன்படுத்துகின்றார். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் காரணமாக ஏற்படும் பரிப்பினை அறுதியீடு செய்து ஆயுட்கால முறைக் கணிப்பீட்டாளரின் வேலையின் போதுமானதன்மை பற்றி மதிப்பாய்வு செய்யுமாறு நீர் கேட்கப்பட்டுள்ளீர்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

நிபுணர் ஒருவரால் ஆற்றப்படும் வேலையாக, ஆயுட்கால முறைக் கணிப்பீட்டாளரின் வேலையின் பொருத்தத்தன்மை மற்றும் போதுமானதன்மையை மதிப்பிட நீர் கவனத்திற்கொள்ளும் இரண்டு (02) விடயங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

(A) **வ/ப சோபா (தனி.) கம்பனியானது** தளபாடங்களை உற்பத்தி செய்கிறது. 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்யும் அணியின் சிரேட்ட கணக்காய்வாளராக நீர் நியமிக்கப்பட்டுள்ளீர். கம்பனியின் கடந்த ஆண்டுக் கணக்காய்வை உமது நிறுவனமே மேற்கொண்டதனால், உமது நிறுவனம் புதிய கணக்காய்வு ஈடுபடுத்தற் கடிதத்தினை (audit engagement letter) கம்பனிக்கு அனுப்பவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஈடுபடுத்தற் கடிதத்தின் நோக்கத்தினைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) **வ/ப சோபா (தனி.) கம்பனியின்** கணக்காய்வு ஈடுபடுத்தற் கடிதத்தின் கட்டுறுப்புக்களை மீளாக்கம் (revise) செய்வதற்கு கணக்காய்வாளர் தீர்மானிப்பதற்குக் காரணமாக அமையக்கூடிய மூன்று (03) காரணிகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(B) நீர் இலங்கை பூராகவும் வாழைப்பழ விற்பனை செய்யும் **வ/ப ரச கெசல் (தனி.) கம்பனியின் (RK)** சட்டநியதிக் கணக்காய்வுக்குப் பொறுப்பான ஈடுபடுத்தற் பங்காளராவீர். **RK** ஆனது உமது கணக்காய்வு நிறுவனத்தின் வாடிக்கையாளராக பல ஆண்டுகளாக இருப்பதுடன் உமது நிறுவனத்தின் பாரிய வாடிக்கையாளர்களுள் இதுவும் ஒன்றாகும். உமது நிறுவனம் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களைக் கொண்ட ஒரு சிறிய நிறுவனமாகும்.

அண்மையில் **RK** யின் முகாமைப் பணிப்பாளர் உம்மை அணுகி, உமது கணக்காய்வு அணியினரால் கம்பனியின் அகக் கட்டுப்பாட்டு முறையை முழுமையாகவும் ஆழமாகவும் மீளாய்வு செய்து, அகக் கட்டுப்பாட்டில் இனங்காணப்பட்ட பலவீனங்களை அறிக்கையிடுவதுடன் அந்தப் பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்மொழியவும் முடியுமா எனக் கேட்டிருந்தார். இந்த மீளாய்வானது வியாபார வினைத்திறனை மேம்படுத்துவதற்கான ஒரு தூண்டுதலென **RK** யின் முகாமைப் பணிப்பாளர் அழுத்திக் கூறியிருந்தார். இது கணக்காய்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய வேறானதொரு ஈடுபடுத்தலாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

கணக்காய்வு மற்றும் முன்மொழியப்பட்ட ஈடுபடுத்தலினை ஏற்றுக்கொள்வது தொடர்பில் கணக்காய் வாளர்களின் சுயாதீனத்திற்கான அச்சுறுத்தல்கள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

நீர் இரத்தினபுரியில் அமைந்துள்ள **வ/ப செவன சேர்விசஸ் (தனி.) கம்பனியின்** வெளிவாரிக் கணக்காய்வினை தற்போது முடித்துள்ளீர். இந்தக் கம்பனியின் மூன்று மாதங்களுக்கான கணக்கீட்டுப் பதிவேடுகள் பாதகமான காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக முற்றாக அழிவடைந்திருந்தன.

கணக்காய்வு முடிவடைந்த பின்னர் உடனடியாக நீர் உமது வரைவுக் கணக்காய்வாளர் அறிக்கையினை கம்பனியின் முகாமைப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ளீர்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) எப்போது கணக்காய்வாளர் திருத்தப்படாத கணக்காய்வு அபிப்பிராயத்தினைத் தெரிவிக்க வேண்டுமென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) (i) கணக்காய்வாளர் அறிக்கையில் விடய அழுத்தப் பந்தியை (emphasis of matter paragraph) கணக்காய்வாளர் உட்படுத்த வேண்டியதற்கான காரணத்தினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) கணக்காய்வாளர் விடய அழுத்தப் பந்தியினை உட்படுத்தும் சந்தர்ப்பங்களுக்கு இரண்டு (02) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

இந்தப் பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.
(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

(A) **வ/ப சுவர்ணா செறமிக்ஸ் (தனி.) கம்பனி (SC)** பீங்கான் பொருட்களின் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இந்தக் கம்பனியின் காட்சியறை இல. 555, நுகேகொடையிலும், களஞ்சியம் இல. 565 நுகேகொடையிலும் அமைந்துள்ளன.

கொள்வனவுப் பொருட்களைக் களஞ்சியத்திற்குப் பெற்றுக்கொள்ளும்போது களஞ்சிய எழுதுவினைஞர் பொருள் பெறுவனவுக் குறிப்பினை (GRN) தயாரித்து அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பார். பெறுவனவின்போதே பாதிப்படைந்த பொருட்கள் இனங்காணப்பட்டு உரிய வழங்குநருக்கு அறிவிக்கப்படும்.

வாடிக்கையாளர்கள் பொருட்களை வாங்குவதற்காக தெரிவுசெய்யும்போது அவர்கள் காட்சியறைக் காசாளரிடம் கொடுப்பனவினை மேற்கொள்ள வேண்டும். காட்சியறைக் காசாளர் பணத்தைப் பெற்றுக்கொண்டு பொருள் விலைப்பட்டியலை (invoice) கையால் தயாரிப்பார். வாடிக்கையாளர் பொருள் விலைப்பட்டியலைக் காட்சியறையில் பெற்றுக்கொண்டு அதனைக் களஞ்சிய எழுதுவினைஞரிடம் சமர்ப்பிப்பார். களஞ்சிய எழுதுவினைஞர் பொருள் அனுப்புதற் குறிப்பினைத் தயாரித்து அதனை கூலிப் பணியாளரிடம் கொடுக்க அவர் பொருட்களை வாடிக்கையாளரின் வாகனத்தில் ஏற்றுவார்.

கம்பனிக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட கணக்காளரான நீர், கீழ்வருவனவற்றை அவதானித்துள்ளீர்:

- கடந்த இரு மாதங்களாக மாதாந்த பௌதிகரீதியான தொக்குக் கணக்கெடுப்பு இடம்பெற வில்லை. 2017 அக்டோபர் மாதத்திற்கான அறிக்கை பல உருப்படிகளில் குறைபாட்டினைக் காட்டுகின்றது.
- தாம் செலுத்திய பணத்திற்குரிய அளவிலும் பார்க்க குறைந்த எண்ணிக்கையான பொருட்களையே தாம் பெற்றுள்ளதாக வாடிக்கையாளர் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.
- களஞ்சியத்திற்கு வெளியே ஒரு தொகை பாதிக்கப்பட்ட பொருட்கள் காணப்பட்டன.
- காட்சியறைக் காசாளர் ஒரு குறிப்பிட்ட நாளில், தான் உண்மையாகச் சேகரித்த பணத்திலும் பார்க்க குறைவான தொகையையே வைப்புச் செய்திருந்தார். நீர் அதுபற்றி அவரிடம் விசாரணை செய்தபோது அவர் அந்தப் பணத்தினை ஊழியர் சேமநலன் பொருட்களைக் கொள்வனவு செய்ய செலவுசெய்ததாகக் கூறினார்.

நீர் **SC** கம்பனியின் முகாமையுடன் பொருள் விலைப்பட்டியலிடல் (invoicing), தொக்குப் பராமரிப்பு மற்றும் ஏனைய நிதிசார்ந்த செயன்முறைகளுக்கு கணினிமயப்படுத்திய தகவல் முறைமையின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடியுள்ளீர்.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

(a) மேலே விபரிக்கப்பட்ட விற்பனைச் செயன்முறையில் காணப்படுகின்ற அகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் ஐந்தினை (05) ***இனங்காண்க.*** (05 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் இனங்காணப்பட்ட ஒவ்வொரு பலவீனத்தையும் நிவர்த்தி செய்வதற்கு **SC** யின் முகாமைக்கு ஒரு பரிந்துரை வீதம் ***குறிப்பிடுக.*** (05 புள்ளிகள்)

(c) பொருள் விலைப்பட்டியலிடல், தொக்குப் பராமரிப்பு மற்றும் ஏனைய நிதிசார் செயன்முறைகளுக்காக கணினிமயப்படுத்திய தகவல் முறைமையில் இருக்க வேண்டிய மூன்று (03) தகவல் தொழினுட்பப் பொதுக் கட்டுப்பாடுகளை ***இனங்காண்க.*** (03 புள்ளிகள்)

(d) மேலே (c) யில் இனங்காணப்பட்ட தகவல் தொழினுட்பப் பொதுக் கட்டுப்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் இவ்விரண்டு (02) உதாரணங்களைக் ***குறிப்பிடுக.*** (06 புள்ளிகள்)

(B) ***ரெஸ்கோ சிறீலங்கா* (TSL)** என்பது கொழும்பில் ஒரு தொடர் உணவகங்களை நடாத்துகின்ற கம்பனியாகும்.

அதன் மேன்நிலைக் கம்பனியான ரெஸ்கோ குளோபல் **– TG,** கிரமமாக **TSL** இன் தொழிற்பாடுகளை கண்காணிக்கிறது. இந்தத் தேவைக்காக **TSL** இன் உணவகங்களின் வாடிக்கையாளர் திருப்தியினை அளவிடுவதற்காக **TG** குறிப்பிட்ட பிரதான தொழிற்பாட்டுக் காட்டிகள் (Key Performance Indicators - KPI) சிலவற்றை நிர்ணயித்துள்ளது. ஒவ்வொரு KPI இனையும் கணிப்பதற்கான முறைகள் **TSL** க்கு வழங்கப்பட்ட **TG** யின் செயற்பாட்டுக் கைநூலில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. தரவுகள் காலாண்டிற்கான வாடிக்கையாளரின் பின்னூட்டல் படிவங்களிலிருந்து எடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் **TSL** ஆனது இந்த KPI காட்டிகளின் தொகுதியைக் கொண்ட கூற்றினை **TG** க்கு சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் கூற்றின் நம்பகத்தன்மையை செவ்வை பார்ப்பதற்காக 2017 செப்ரெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்கான KPI களின் கூற்று **TSL** இன் வெளிவாரி கணக்காய்வாளரால் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென **TG** கேட்டுள்ளது. வெளிவாரிக் கணக்காய்வாளர் இந்தக் கூற்றின் மீது உறுதிப்பாட்டு அறிக்கையொன்றினை (assurance report) வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

***நீங்கள் செய்யவேண்டியது :***

உறுதிப்பாட்டு அறிக்கையினை வழங்குவதற்காக **TSL** இன் வெளிவாரி கணக்காய்வாளர் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் மூன்று (03) பிரதான மூலகங்களை ***ஆராய்க.*** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

***வரையறுக்கப்பட்ட டியாரா கம்பனி*** ஆடைக் களஞ்சியமொன்றினைச் சொந்தமாகக் கொண்டு செயற்படுகின்ற, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். இது உயர்ந்த செலவுகளை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு நவீன பிரெஞ்சுப் பாங்கினைக் கொண்ட மாலைநேர ஆடைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்கிறது. இதன் வாடிக்கையாளர்கள் மிகவும் நவீன நடத்தைப் பாங்கினை விரும்புபவர்களாகவும் உற்பத்திப் பொருட்கள் பற்றி நல்ல அறிவுடையவர்களாகவும் இருப்பதுடன் களஞ்சியத்திலுள்ள காலத்திற்குப் பொருத்தமற்ற ஆடைகள் மிக விரைவாக சந்தைப்படுத்தலுக்கு உள்ளாகும் ஆற்றலை இழக்கின்றன. இலங்கையில் நடத்தைப்பாங்குத் தொழிற்றுறை (fashion industry) உயர்ந்த போட்டித்தன்மையைக் கொண்டுள்ளதுடன் வாடிக்கையாளர்களின் முன்னுரிமைகளுக்கு ஈர்க்கப்படுகிறது.

முதல் அரையாண்டில் நவீன நடத்தைப் போக்கானது மெக்ஸி ஆடையாக (Maxi dress) உள்ளதுடன் இது வாடிக்கையாளர்களிடையே மிகவும் பிரசித்தமானது. மெக்ஸி ஆடைகளுக்கு அதிக கேள்வி இருக்குமென எதிர்பார்த்து **டியாரா கம்பனி** 2017 பெப்ரவரியில் ரூ. 15 மில்லியன் பெறுமதியான மெக்ஸி ஆடைகளை இறக்குமதி செய்தது. 2017 ஆகஸ்டில், வாடிக்கையாளர்களிடையே கையில்லாத ஆடைகள் (Sleeveless dress) மிகவும் பிரசித்திபெற்றதாக மாறியிருந்தது. 2017 டிசெம்பர் 31 இல் **டியாரா கம்பனி** ரூ.5 மில்லியன் பெறுமதியான கையில்லாத ஆடைகளையும், ரூ. 2 மில்லியன் பெறுமதியான மெக்ஸி ஆடைகளையும் அதன் களஞ்சியத்தில் எஞ்சிய தொக்குகளாகக் கொண்டிருந்தது.

**வ/ப டியாரா கம்பனியின்** 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு உம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிறுவனம் மற்றும் அதன் சூழல் பற்றி விளங்கிக் கொள்வதற்கு நீர் கவனத்திற் கொள்ளவேண்டிய, வியாபாரத்தின் பொதுவான பகுதிகள் மூன்றினை (03) ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் வீதம் தந்து **இனங்காண்க.** (06 புள்ளிகள்)

(b) (i) தொக்குகள் தொடர்பில் நீர் இனங்காண எதிர்பார்க்கும் கணக்காய்வு இடர் (audit risk) ஒன்றினைக் **ஏற்பிசைவுசெய்க.** (03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் இனங்காணப்பட்ட இடருக்கு பதிலிறுத்தலாக நீர் மேற்கொள்ளும் கணக்காய்வு விதிமுறைகள் (audit procedures) இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(iii) **வ/ப டியாரா கம்பனியின்** ஆண்டு இறுதித் தொக்கு மீதிகளின் மதிப்பீட்டினை மேற்கொள்ள நீர் திட்டமிடும் வேறொரு வலுவளிப்பு விதிமுறையினை (substantive procedure) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(c) கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு கீழே தரப்பட்டுள்ள கணக்காய்வு விதிமுறைகளை ஒவ்வொரு உதாரணம் தந்து **ஒப்பிடுக:**

(i) விசாரணை எதிர் அவதானித்தல் (Inquiry Vs Observation)

(ii) மீள் கணிப்பீடு எதிர் மீள மேற்கொள்ளல் (Re-calculation Vs Re-performance) (06 புள்ளிகள்)

(d) வழங்குநர் ஒருவரின் கீழே தரப்பட்டுள்ள கணக்கிணக்கக் கூற்று உம்மிடம் தரப்பட்டுள்ளது. இந்தக் கணக்கிணக்கம் **வ/ப டியாரா கம்பனியின்** கடன்கொடுத்தோர் ஒருவரினதாகும்:

| | **ரூ.** | **ரூ.** |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் பேரேட்டின்படி மீதி | | 150,000 |
| கூட்டு: | | |
| வழங்குநரால் அனுப்பப்பட்டு இன்னும் பேரேட்டில் பதிவுசெய்யப்படாத பொருட்கள் | 60,000 | |
| வழங்குநரால் இன்னும் கணக்கிற்கொள்ளப்படாத திருப்பி அனுப்பிய தொக்குகள் | 18,000 | |
| வழங்குநரால் இன்னும் பெறப்படாத கொடுப்பனவு | 200,400 | 278,400 |
| **வழங்குநரின் கூற்றின்படியான மீதி** | | **428,400** |

இந்தக் கணக்கிணக்கத்தில் நீர் மேற்கொள்வதற்குத் திட்டமிடும் கணக்காய்வு விதிமுறைகள் இரண்டினை (02) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |